[1st September 1970

THIRU D. SANTOSHAM : Sir, I find from the question that the building to be constructed is for a Free Reading Room for Women and Children and that men are to be precluded from entering into this Reading Room. If so, what is the reason for keeping this Reading Room reserved for women and children only ? Are there any other Reading Rooms of this nature ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இந்த இடத்திலிருந்து அந்த இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நகர சபையின் இசைவு எதிர்பார்க்கப்படுகிறது என்று தான் இங்கே குறிப்பிருக்கிறது.

THIRU D. SANTOSHAM : My question was : Are men precluded from entering into this Reading Room ? Are men not supposed to be entering into this Reading Room ? If so, what is the reason ? Are there similar Reading Rooms in this State ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் என்றிருப்பதால் அவர்களுக்கு மட்டும் தான் என்று நாம் கொள்ளவேண்டியிருக்கிறது. ஆனால் அதுபற்றிய சரியான தகவல் இப்போது இல்லை.

திரு. டி. கே. சுப்பையா : நூலக ஆணைக் குழுவின் சேர்மனாக தற்போது யாரும் இல்லை. யார் நூலக ஆணைக் குழுவின் தலைவராக இருந்தபோது இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இதற்கு முன்னால் இருந்த நூலக ஆணைக் குழுத் தலைவர் காலத்தில். புதிய தலைவர் இன்னும் நியமிக்கப்படவில்லை. ஏற்கெனவே இருந்த தலைவர் காலத்தில் தான் இது தீர்மானிக்கப்பட்டது. யார் என்று எனக்குத் தெரியவில்லை.

*Sugar Factories*

*66. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Government have decided to commission three more Sugar Factories in the State ; and

(*b*) if so, the necessity for the same ?

**சர்க்கரை ஆலைகள்**

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில், மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளைத் தொடங்க அரசு கருதியுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான அவசியம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) நமது மாநிலத்தின் வளர்ச்சிக்காக.

1st September 1970]

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : அமைக்கப்படவிருக்கிற சர்க்கரை ஆலைகள் சர்க்கார் துறையில் அமைக்கப்பட இருக்கின்றனவா, அல்லது கூட்டுறவுத் துறையிலா, அல்லது தனியார் துறையிலா என்று அமைச்சர் அவர்கள் விவரம் அளிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : மூன்று ஆலைகளும் கூட்டுறவுத் துறையில் தான் அமைக்கப்பட இருக்கின்றன. இரண்டு ஆலைகள் வடாற்காடு மாவட்டத்திலும் ஒன்று கோவை மாவட்டத்திலும் ஏற்பட இருக்கின்றன.

THIRU D. SANTOSHAM : Are the Government satisfied that the existing sugar factories in the Co-operative Department are running satisfactorily and at a profit ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இன்றைய நிலைமையில் பார்த்தால், தனியார் துறை பாதிக்கப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. எல்லா சர்க்கரை ஆலைகளிலுமே சர்க்கரை விற்பனையாகாத நிலையில், சரியான சந்தையில்லை என்ற நிலை இருக்கிறது. இது நிரந்தரமான நிலையாக இருக்காது என்று நான் கருதுகிறேன். இந்திய அளவில் ஏராளமான சர்க்கரை உற்பத்தி செய்து வெளிநாடுகளில் விற்பனை செய்ய மத்திய அரசு தற்போது முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. விவசாயிகள் வாழ்க்கைத்தரம் ஓரளவுக்கு உயர வேண்டுமானால், இப்படிப்பட்ட பணப் பயிர்கள், 'கேஷ் கிராப்' களை அதிகமான அளவுக்கு உற்பத்தி செய்ய வழிவகை செய்யவேண்டும். ஆகவே தான் 4வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சர்க்கரை ஆலைகளை இன்னும் தொடங்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, இப்போது கோவை மாவட்டத்தில் ஒரு ஆலையையும் வடாற்காடு மாவட்டத்தில் இரண்டு ஆலைகளையும் துவங்கப்போவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இந்த மாவட்டங்களில் இருக்கிற சர்க்கரை ஆலைகள், அங்கே உற்பத்தியாகிற கரும்பு அறைவைக்கான போதிய 'கெபாசிடி' இல்லாமல் இருக்கின்றன என்ற காரணத்தாலா, அல்லது வேறு காரணங்களாலா, அந்த ஆலைகள் மீண்டும் அந்த மாவட்டங்களிலேயே ஆரம்பிக்கப்பட இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஏற்கெனவே கோவை மாவட்டத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. அது நம்முடைய அமைச்சர் அவர்களுடைய பகுதியிலே தான் இருக்கிறது. ஆயினும் அந்தப் பகுதியில் இருப்பவர்கள் இன்னும் அதிகமான தண்ணீர் தருவதற்கு பி.டபிள்யூ.டி. யிலிருந்து அனுமதி கிடைத்தால், இன்னும் ஏராளமான கரும்பு உற்பத்தி செய்வதாகச் சொல்கிறார்கள். மேலும் கோவை மாவட்டத்தில் கேரளாவை ஒட்டியிருக்கிற பகுதியில் உள்ள ஒரு ஆலைக்கு நாம் இன்றுவரை 1000 ஏக்கர் நிலத்தில் பயிராகும் கரும்பை—சரியான நினைவில்லை—நாம் கொடுப்பதாக உறுதியைத் தந்திருக்கிறோம். ஆகவே நாம் அவர்களுக்காக மட்டுமல்லாமல் நமக்கும் ஒரு ஆலையை ஆரம்பித்துக்கொள்ளலாம் என்பதன் அடிப்படையில்

புதிய ஆலையை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் ஏராளமான கரும்பு உற்பத்திக்கு வாய்ப்பிருக்கிறது. என்பதால் இன்னும் 2 சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : அமைச்சர் அவர்கள் 3 சர்க்கரை ஆலைகளில் இரண்டை வடாற்காடு மாவட்டத்திலும் ஒன்றைக் கோவை மாவட்டத்திலும் அமைக்கப் போவதாகச் சொன்னார்கள். அவைகள் எந்தெந்த ஊர்களில் அமைக்கப்படும் என்ற விவரம் தருவாரா ? அதோடு இன்று நாடு முழுவதும் சர்க்கரை இருப்பு பெருமளவுக்கு அதிகமாகி, அதன் காரணமாக விலைகள் இறங்கிக்கொண்டு வருவதால், சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில் நடப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே இந்த நிலைமையில் புதிய ஆலைகளை அமைப்பதுபற்றி அரசாங்கம் மறு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : உறுப்பினர் அவர்கள் கேட்ட இடங்களைப் பொறுத்த அளவில், இதற்கு என்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்களாக அந்தக் குழு ஆராய்ந்து வடாற்காடு மாவட்டத்தில் இரண்டு இடங்களைச் சொல்லியிருக்கிறது. அம்பலூர், பிரம்மபுரம் என்று 2 இடங்களையும், கோவை மாவட்டத்தில் பேரூர் என்ற இடமும் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த இடங்களைப் பற்றி இறுதியாக முடிவு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சர்க்கரை ஆலைகள் இன்னும் தேவைதானா என்பதற்கு நான் ஏற்கெனவே பதில் சொன்னேன். இன்னும் அதிகமான சர்க்கரை ஆலைகளை தமிழ் நாட்டில் அமைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இப்போது இடைக் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து ஏற்றுமதிக்கு நிறைய வாய்ப்பில்லாத காரணத்தால்தான், நம் நாட்டுச் சர்க்கரை ஆலைகளுக்குக் கிராக்கி குறைந்துகொண்டிருக்கிறது. இது ஒரு இடைக்காலப் பிரச்னையாக இருக்கும் என்று தான் இந்த அரசு கருதுகிறது. நீண்ட காலப் பிரச்னையல்ல இது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், சர்க்கரை அதிகமாக உற்பத்தி செய்வதற்கும், விவசாயிகள் கரும்பை ஏராளமாகப் பயிரிடுவதற்கும் அதிகத் தேவையிருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : சென்ற வருஷத்திற்கு முந்தின வருஷம் ஏராளமாகச் சர்க்கரைக்குக் கிராக்கி ஏற்பட்டு, நல்ல விலை கிடைத்ததால், போன வருஷம் எல்லோரும் நல்ல விலை கிடைக்கும் என்ற எண்ணத்தில் ஏராளமாகக் கரும்பு உற்பத்தி செய்து, கடைசியில் அதை வெட்டுவதற்கும் அறைவைக்கும் கூட கட்டுப்படியாகாத காரணத்தால், பல இடங்களில் கரும்புப் பயிருக்குத் தீ வைத்து அழித்தார்கள் என்று நான் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவதோடு, சென்ற வருஷத்து சர்க்கரை 'கேரி ஓவர்' ஆகி, தற்போது பல லட்சக் கணக்கான டன் சர்க்கரை கையிருப்பில் இருக்கிறது என்று பத்திரிகையில் செய்தி ஒன்றைப் பார்த்தேன். ஆகவே இந்தச் சர்க்கரை ஆலைகளை சர்க்கார் துறையிலோ, கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்கும்போது, கொஞ்சம் நன்றாக ஆராய்ந்து ஆரம்பிப்பது நல்லது என்று நினைக்கிறேன். இந்த யோசனையைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1st September 1970]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : ஒவ்வொரு சர்க்கரை ஆலைக்கும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக் கூடாது என்று தான் ஒவ்வொரு ஆலைக்கும் இத்தனை ஏக்கர் என்று நிர்ணயிக்கிறோம். அதற்கு எல்லை வரம்பையும் நிர்ணயிக்கிறோம். எல்லை வரம்பிற்குள்ளாக இருக்கும் பதிவு செய்யப்பட்ட நிலங்களில் தான் பயிர் செய்ய வேண்டும். அவர்கள் கட்டாயம் ஆலைக்குக் கரும்பு கொடுக்க வேண்டும் என்று விதி வைத்திருக்கிறோம். இப்படி மாறி மாறி வருவதற்குக் காரணம் சர்க்கரை விலை என்று மட்டும் சொல்ல முடியாது. வெல்லத்தின் விலை கிராக்கியாக இருக்கும்போது, நம்முடைய விவசாயிகள் பதிவு செய்ததைக்கூட மீறி, வெல்லத்தை உற்பத்தி செய்கிற முயற்சியில் ஈடுபடுகிறார்கள். இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் ஏற்படு கிறது. வெல்லத்திற்கு நல்ல விலை இல்லை என்ற உடனேயே, விவ சாயிகள் சர்க்கரை ஆலையை நோக்கி வருகிறார்கள். எனவே ஒவ்வொரு ஆலைக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலங்களை ஒதுக்கி, அந்த ஆலைக்கும் அந்த விவசாயிகளுக்கும் தொடர்பு ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அந்தத் தொடர்பு உண்மையாகவே நல்ல முறையில் இரண்டு பேர் களாலும் பின்பற்றப்பட்டால், இந்த இழப்பு ஏற்படாது. சென்ற ஆண்டு ஏற்பட்டதற்குக் காரணம் இதுதான். பதிவு செய்யப்படாதது, பதிவு செய்யப்பட்டது என்ற போட்டி ஏற்பட்டது. பதிவு செய்யப் படாதவர்கள் கூட தங்கள் நிலங்களைப் பதிவு செய்யப்பட்டதாகக் கூறி, இதன் காரணமாக பதிவு செய்தவர்களுக்கும் ஆபத்து வந்தது. பதிவு செய்தவர்கள் நல்ல நோக்கத்தோடு ஆலையோடு நல்ல தொடர்பு கொண்டு ஒற்றுமையாகச் செயல்பட்டால், ஆலையும் நன்றாக நடக்கும், கரும்பு உற்பத்தியும் பாதிக்கப்படாமல் இருக்கும். இது தான் உண்மை. விவசாயிகளுக்காக வாதாடும் நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவசாயிகளுக்கு இதைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : அதிகமான அளவுக்குச் சாகுபடி செய்ததன் காரணமாக அந்தக் கரும்பை என்ன செய்வது என்று தெரியாமல் நெருப்பு வைத்துக்கொளுத்தியதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட சம்பவம் ஏதேனும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அப்படியானல், அவ்வாறு நெருப்பு வைப்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து அவர்களைத் தண்டிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நம் தமிழ் நாட்டு விவசாயிகள் நம் செல்வத்தைப் பாழாக்க மாட்டார்கள் என்பதில் எனக்கு நம் பிக்கை உண்டு.

திரு. டி. கே. சுப்பையா : சர்க்கரை ஆலைக்கு இன்னின்ன கிராமங் களில் இவ்வளவு விஸ்தீரணத்திற்கு இன்னின்ன நிலங்கள் என்று சரியாக இல்லாததால், விவசாயிகளுக்கு எந்தப் பகுதி கரும்பு விளைவிக்கக்கூடிய பகுதி என்று தெரியாமல் இருக்கிறது. சில நேரங்களில் இது எல்லைக்குள் இருக்கிறது என்கிறார்கள். சில நேரங்களில் இது எல்லையில் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே அரசாங்கம் இனியாவது இன்னின்ன கிராமங்களில் இன்னின்ன பகுதி, இவ்வளவு ஏக்கர் என்று பகிரங்கமாகக் கரும்பு விளைவிக்கக் கூடிய பரப்புபற்றி அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அப்படிப்பட்ட தகராறு இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றப்பார்க்கிறார்கள். அது தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு வருகிறது. விவசாய இலாக்காவிலிருந்து இன்னின்ன ஏக்கர் என்று எல்லை வரையறுத்து உத்திரவு போடுகிறார்கள். ஒவ்வொரு ஆலைக்கும் அந்த உத்தரவு இருக்கிறது. விவசாயிகள் அந்த உத்தரவின் அடிப்படையில் தான் போய் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது. பதிவு செய்கிற முறையில் தான் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப சர்க்கரை விலை குறைந்துவிட்டால் ஆலை முதலாளிகள் விவசாயிகளை ஏமாற்றப் பார்க்கிறார்கள். அதைப் போலவே வெல்லத்தின் விலை ஏறிவிட்டால், ஆலைகளை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இது ஒரு பொருளாதாரப் பிரச்னையாக இருக்கிறது. எங்கே பார்த்தாலும், இப்போது புரொகிபிஷனை எடுத்துவிட்டதால் வெல்லத்திற்கு அதிகமான கிராக்கியில்லை. எதிர்காலத்தில் வெல்லத்தால் இந்தச் சிக்கல் நம் சர்க்கரை ஆலைகளுக்கு ஏற்படாது என்று நான் கருதுகிறேன்.

### *Tamil Nadu State Transport Buses*

*67. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that many buses belonging to Tamil Nadu State Transport Department are emitting huge volume of thick and obnoxious smoke which is injurious to health ; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government to prevent this hazard ?

### தமிழ் நாடு அரசு போக்குவரத்துப் பேருந்துகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாடு அரசு போக்கு வரத்துத் துறையின் பேருந்துகள் பல ஓடும்பொழுது அடர்த்தியான புகையை வெளிவிட்டுக் கொண்டிருக்கின்றன என்றும், அது சுகாதாரத்திற்குக் கேடு விளைவிக்கின்றது என்பதும் அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், இச்சுகாதாரக் கேட்டைத் தவிர்ப்பதற்காக அரசினால் எடுக்கப்பட்ட அல்லது எடுக்கக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ)&(இ): தமிழ் நாடு அரசு போக்குவரத்தைச் சேர்ந்த சில பேருந்துகள் பெருமளவில் புகையை வெளிவிடுகின்றன. எரிபொருளூட்டுக் குழாய்ப் பகுதியைப் பழுது பார்ப்பதன் மூலம் அவற்றிலுள்ள குறைபாடுகள் நீக்கப்பட்டு வருகின்றன.